தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 ன் கீழ் செய்யும் விண்ணப்பம்,

தேதி:

<u>பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்.</u>

அனுப்புநர்,

பெறுநர்,
பொது தகவல் அதிகாரி,
தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005.
................................ தாலுக்கா அலுவலகம்.
....................................
................................. மாவட்டம்.

ஐயா,

பொருள் : தகவலறியும் உரிமைச் சட்டம் 2005 - மக்களாட்சியின் தேவை அரசுகளும் அதன் அமைப்புகளும் மக்களுக்குப் பதில் அளிக்கக் கடமைப்பட்டவைகளாக்குதல்

.........................................

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 - ன் கீழ் எனக்கு கீழ்க்குறிப்பிட்ட தகவல்களையும் ஆவணங்களின் நகல்களையும் அளித்திட அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

1 ................................ முதல் இன்றுவரை தங்கள் அலுவலகத்தில் உள்ள பதிவு படி தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்தவர்கள் பெயர் அஞ்சல் விலாசம்,. மற்றும் இவர்களில் யார் யாருக்கு எத்தனை எத்தனை தினங்களில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்ற தகவல்களை அளிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

2 கடந்த ................................ ம் தேதி முதல் ..................................... ம் தேதி வரை தங்கள் அலுவலகத்தில் வரப்பெற்ற உட்பிரிவு செய்து பட்டா வழங்கக் கேட்டு வரப்பெற்ற மனுக்களின் ஒளி நகலும் அதன் மீது பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணையின் ஒளி நகலும் அந்தக் கோப்பில் உள்ள அலுவலகக் குறிப்பின் ஒளி நகலும் அளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

3 மேற்படி காலத்தில் உட்பிரிவு மனுக்கள் உரிய காலத்தில் தீர்வு செய்யப்படுவதை ஆய்வு செய்த வட்ட ஆட்சியரின் மற்றும் நில அளவுத் துறை மாவட்ட அளவிலான அலுவலரின்., மற்றும் கோட்ட மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆய்வு செய்த ஆய்வுக் குறிப்பின் ஒளி நகலை அளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

4 கடந்த ................................ முதல் .................................. வரை தங்கள் அதிகார எல்லையில் உள்ள பத்திரப்பதிவு அலுவலகங்களிலிருந்து பத்திரப் பதிவு செய்தபிறகு பட்டா மாற்றம், பட்டா பிரிப்பிற்கு என வரப்பெற்ற கடிதங்கள் (அ) படிவங்கள் மொத்தம் எத்தனை என்றத் தகவலை மாதம் வாரியாக அளித்திடவும். அவற்றில் எந்த பிரிவின் எந்த பதிவேட்டில் வரவு வைக்கப்பட்டன என்றும், அவற்றில் பட்டா மாற்றம் அல்லது உட்பிரிவு செய்யப்பட்டு ஏற்கப்பட்டு ஆணைகள் இடப்பட்டவை எத்தனை என்றும்,. ஏற்கப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டவை எத்தனை என்றும் ,. இன்னும் எத்தனை இனங்கள் யார் யாரிடம் இரண்டுமில்லாமல் நிலவையில் உள்ளன என்றும் தகவல் அளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

5 மேற்படி ............................. முதல் ................................ வரையிலானக் காலத்தில் பத்திரப்பதிவு அலுவலகங்களிலிருந்து வந்தவை அல்லாமல் பொதுமக்களிடம் நேரடியாக (1) முழு சொத்துக்களையும் பட்டா மாற்றம் செய்ய,. (2) பட்டா பிரித்து பட்டா மாற்றம் செய்ய மற்றும் (3) பெயர் மாற்றம் செய்வதற்காக தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற/வந்த மொத்த மனுக்கள் எத்தனை என்றும் அவை தங்கள் அலுவலகத்தில் வரவு வைக்கப்பட்டவை எத்தனை என்றும். கிராம பதிவேடு எண் - 3 ல் வரவு வைக்கப்பட்டவை எத்தனை என்றும் கிராமம் வாரியாக தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

6 பத்திரப் பதிவு அலுவலகத்திலிருந்தும் பொது மக்களிடமிருந்து நேரடியாகவும் வரப் பெற்ற மொத்த மனுக்களும் ஏதாவது ஒரு கிராம பதிவேடு எண் 3 - ல் வரவு வைக்கப்படவில்லை எனில் அப்படி குறைகிற எண்ணிக்கை எத்தனை என்றும் அவை அனைத்தும் தற்போது எங்குள்ளன என்றும் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

7 மேற்படி ........................... முதல் ............................ வரையிலான காலத்தில் பத்திரப்பதிவு அலுவலகங்களிலிருந்து வரப்பெற்ற படிவங்களில் கிராம நிர்வாக அலுவலரின் பதிவேடு எண் 3 ல் வரவு இல்லாமல் அந்த அரசு ஆவணங்களான பட்டா மாற்றப் படிவங்கள் மொத்தம் எத்தனை காணாமல் போயிருக்கிறது என்றும் அரசு ஆவணங்கள் காணாமல் போனதற்காக உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையின் ஒளி நகல் மற்றும் தாங்கள் அலுவலகம் பொறுப்பானவர்கள் மீது எடுத்த நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்களின் ஒளி நகலை அளிக்கக் கேட்டுகொள்கிறேன்.

8 மேற்படி .................................. முதல் ............................ வரையிலானக் காலத்தில் கிராம நிர்வாக அலுவலர்களின் பதிவேடு எண் - 3 ல் வரவு வைக்கப்பட்ட மனுக்கள் படிவங்கள் மொத்தம் எத்தனை என்றும் அவற்றில் சாதாரண பட்டா மாற்றம் எத்தனை, உட்பிரிவு செய்யப்பட்டு ஏற்கப்பட்டு ஆணைகள் இடப்பட்டவை எத்தனை என்றும்,. ஏற்கப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டவை எத்தனை என்றும்,. இன்னும் - எத்தனை இனங்கள் யார் யாரிடம் இரண்டுமில்லாமல் நிலுவையில் உள்ளன என்றும் தகவல் அளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

9 .............................. முதல் ......................... வரையிலான காலத்தில் மேற்குறிப்பிட்ட இனங்களில் பட்டா மாற்றம் பட்டா பிரிப்பிற்கு என வரப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் பத்திரப்பதிவு அலுவலகப் படிவங்களின் மீது பட்டா மாற்றம் செய்யப்படாமல் அல்லது உட்பிரிவு செய்யப்படாமல் விடப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட அல்லது தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களின் மனுதாரர்களின் பெயர் விலாசப் பட்டியலை. அவ்வாறு நிராகரிக்கப்பட்டதற்கானக் காரணத்தோடு அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

10 மேற்படி .................... முதல் ........................ வரை தங்கள் அலுவலகத்தில் வாரிசுச் சான்று பெற்றவர்களின் பெயர் விலாசம் சான்று எண் ஆகியவற்றை தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

11 தங்கள் அலுவலக வைப்பறையில் எந்தெந்த கிராமங்களின் அ) கிராம வரைபடம்., ஆ) நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முந்தைய அ பதிவேடு ,. இ) நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு பிந்தைய அ பதிவேடு,. ஈ) கிராம சிட்டா., ஆகிய பதிவேடுகள் இல்லை என்றத் தகவலையும்., உ) எத்தனை கிராமங்களுக்கு 13 ஆண்டுகளுக்கான அடங்கல் பதிவேடுகள்,. ஊ) புல வரை படப்புத்தகம் ஆகிய ஆவணங்கள் இல்லை என்றும் தகவல் அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

12 ஆறு, குளம், ஏரி. கண்மாய். ஆகியவற்றிலும்,. இவற்றிற்கு மழைத் தண்ணீரைக் கொண்டுவரும் கால்வாய்கள் அகியவற்றில் மாசுபட்ட தண்ணீரை விட்டால் அது எந்தெந்தச் சட்டங்களின் எந்தெந்தப் பிரிவிலான கிரிமினல் குற்றம் என்பதையும் அதற்கு வழக்கு பதிவு செய்ய

அதிகாரம் பெற்றவர்கள் எந்தெந்த துறையின் எந்தெந்த பதவியில் உள்ள அதிகாரிகள் என்பது பற்றியும் தகவல்களை அளிக்கக் கேட்டுக் கொள்ளகிறேன்.

13 தங்கள் வருவாய் வட்டத்தில் உள்ள ஏரி குளம் குட்டை பிற நீர் பிடிப்புகளின் பட்டியலையும் அவை ஒவ்வொன்றினையும் பராமரிக்கக் கடமைப்பட்ட துறையின் பெயர், அலுவலர்களின் பதவிப் பெயர் ஆகிய தகவல்களை அளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

14 ஆறு, குளம், ஏரி, கண்மாய் நீர் பிடிப்பு பகுதி மற்றும் மழைத் தண்ணீரைக் கொண்டு வரும் கால்வாய்கள் போன்றவற்றில் உள்ள ஆக்ரமணங்கள் அகற்றப்படவேண்டும் என்ற சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பின் ஒளி நகலையும் அதன் மீது தங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பிறப்பித்த ஆணையின் ஒளி நகலும் அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்

15 இந்த ஆணைகளின் பேரில் தங்கள் வட்டத்தில் எந்த எந்த ஏரிகள் குளம் குட்டைகளில் எந்த எந்த தேதிகளில் ஆக்ரமனங்கள் அகற்றப்பட்டது என்றும் மற்றும் அந்தத் தீர்ப்பின்படி எந்த நீர் ஆதாரங்களிலாவது ஆக்ரமணங்கள் அகற்றாமல் இருந்தால் அதற்கான காரணங்கள் அடங்கிய தகவல்களை தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

16 மழலையர் பள்ளி முதல் மேல் நிலைப்பள்ளிகள் வரை தங்கள் வட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களின் பட்டியலை அளித்திட கேட்டுக் கொள்கிறேன், என்றும் இவற்றில் தற்போதும் டி படிவ அனுமதி இன்றி இயங்கும் கல்வி நிறுவனங்கள் எவை எவை என்றும் தகவலையும் அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன், இவற்றிற்கு டி படிவ உரிமம் தங்களால் வழங்கப்படவேண்டுமெனில் அந்த கல்வி நிறுவனம் உள்ள கட்டிடத்தின் என்னென்ன வசதிகள் அதாவது எத்தனைப் பிள்ளைகள் எத்தனை சதுர அடி பரப்பில் உள்ள அறையில் அமரவேண்டும்,. எத்தனை பிள்ளைகளுக்கு எத்தனை அளவு கழிப்பிட வசதி., குடி நீர் வசதி,. தீ தடுப்புச் சாதனம்., படிக்கட்டுகளின் அகலம் உயரம்,. விளையாட்டுத்திடல் போன்ற என்னென்ன அம்சங்கள் இருந்தால் அந்த டி படிவ உரிமம் வழங்க விதிமுறைகளில் இடம் உள்ளன என்ற விவரப்பட்டியலை அளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன், இந்த உரிமம் எந்த சட்டத்தின் எந்தப்பிரிவின் கீழ் தங்களால் வழங்கப்படுகிறது என்றும் தகவல் அளிக்கவும்,. தங்கள் வட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு கடைசியாக வழங்கப்பட்ட டி படிவச் சான்றுக் கோப்பு எண் அந்த டி படிவச் சான்று காலம் ஆகியவற்றை அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

17 இலஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வுத் தகவல் பலகைகளைத் தங்கள் அலுவலகத்திலும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மண்டல துணை வட்ட ஆட்சியர் அலுவலகங்கள்,. மற்றும் கிராம நிர்வாக அலுவலகங்களில் பொதுமக்கள் அறியும் வண்ணம், தயாரித்து வைக்கப்பட்டதற்காக செய்யப்பட்ட செலிவினைக் காட்டும் செலவுச்சீட்டின் ஒளி நகல் அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விண்ணப்பத்திற்கான கட்டணம் ரூ 10- க்கான கோர்ட் கட்டண வில்லை ஒட்டப்பட்டுள்ளது. கோரப்பட்ட தகவல்கள் ஏதேனும் தங்கள் அலுவலகத்தில் இல்லை என்றால் இந்த விண்ணப்பத்தை பிரிவு 6(3) ன் படி கையாளக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,